போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்



378
378
17 FEB 1943
MADRAS
139984

Editor & Publisher: A. Lourduswami, B.A., L.T.
...Training School, Trichinopoly.

பெப்ருவரி 1943 மலர் 8

...முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 1¼.

போதனு விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	165
2.	பழய மாணவர் தினம்—சங்கீதப் போட்டி ...	166
3.	சென்னை கல்வி இலாகா	167
4.	யோசனைக்கணக்கு விடை	169
5.	விடுகவி விடை	169
6.	அணியியல்	170
7.	சிறுவர்களைச் சுத்தமாகவிருக்கப் பழக்குதல் ...	171
8.	மாணவரின் நல்லொழுக்கப் பயிற்சியில் எனது அனுபவம்	172
9.	பாடக் குறிப்பு	174
10.	நாட்டுப்பாடல்	175
11.	இது என்ன?	175
12.	சிறு கதை	176
13.	விகடம்	177
14.	பத்திராதிபருக்கு வாழ்த்து	178
15.	யோசனைக் கணக்கு	178
16.	எம் பாடசாலை வருடாந்தர உல்லாசப் பிரயாணம் ...	179
17.	பெற்ருேர் சங்கங்கள்	180
18.	உங்களுக்குத் தெரியுமா?	181
19.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	182
20.	பொழுதுபோக்கு	183
21.	A. R. P. பாட்டு	185

Rates of Advertisement

Period	Half Page Rs.	As.	Ps.	Full Page Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Imprimatur: ✠ JAMES, *Bishop of Trichinopoly.*

OFFICE OF THE ... 17 FEB 1943 MADRAS

போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து **33**]   **15** பெப்ருவரி **1943**   [மலர் **8**

189984

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை **1943.** அடுத்த மாதம் 16-ம் தேதி முதல் ஷை பரீட்சை நடைபெறும்.

முன் வருஷங்களைப்போல் இவ்வருஷத்திலும் நமது போதனைமுறைப் பாடசாலை, பரீட்சை Centre-ஆக கல்வி இலாகா அதிகாரிகளால் திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. ஸெக்கண்டரி கிரேடு, எலிமெண்டரி ஹையர் கிரேடு, பழய திட்டம் (Old Scheme) புதுத்திட்டம் (Revised Scheme) ஆகிய இந்த இரண்டு திட்டத்தின்படி எழுதவேண்டிய அந்தந்த மாணவர்கள் இங்கு எழுதுவார்கள்.

முன் வருஷங்களில் பரீட்சையில் தவறிப்போன நம் பழய மாணவர்கள் இவ்வருஷம் **வேறு ஸெண்டரில்** பரீட்சை எழுதுவதாய் இருந்தால், இங்கு நம்மிடம் படித்ததாக இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் (Identification Certificate) பெற்றுக்கொள்ளக்கடவர். அதற்காக தேவையுள்ளவர்கள், தபால் சார்ஜுக்கு (0–1–6) ஸ்டாம்பு உடனே அனுப்பிப் பெற்றுக்கொள்ளத் தவறவேண்டாம்.

* * *

பழய மாணவர்தினக் கொண்டாட்டம்.—இஃது அடுத்த மார்ச்சு-மீ 3-ம் உ புதன்கிழமை, சாயங்காலம் 5-30 மணிக்கு நடைபெறும். அவ்வமயம் நம் பழயமாணவர்கள் தவறாமல் விஜயம்

செய்து விழாவைச் சிறப்பித்துத் தாயின் அன்புக்கும் அபிமானத்துக்கும் விசேஷ உரிமையாளர்களாவர் என்று எதிர்பார்க்கிறோம்.

* * * * * * * * *

நம் பாடசாலை உல்லாசப் பிரயாணங்கள்.—கல்வித் தேர்ச்சி, அறிவுவளர்ச்சியாகியவற்றுக்கும் உல்லாசப் பிரயாணங்களுக்கும் (Educational Excursions) எவ்வளவு நெருங்கிய சம்பந்தமுண்டென இங்கு விவரிக்கத் தேவையில்லை. அரசாங்கப் பாடத்திட்டங்களில், இவ்வித உல்லாசப் பிரயாணத்தைக் கல்வியின் ஓர் முக்கியப் பகுதி என்று காட்டவே அது சேர்க்கப்பட்டிருக்கிறது.

உல்லாசப் பிரயாணங்களின் மூலமாய், கல்வியின் நோக்கங்களை நாம் ஈடேறச் செய்யவேண்டியிருப்பதால், உல்லாசப் பிரயாணத்தை எப்படி அதற்கேற்ப அமைப்பது, நடத்துவது என்று நன்கு முன்னதாகவே யோசித்துத் தீர்மானிக்கவேண்டுமன்றோ!

ஆனதுபற்றி ஆசிரிய நேயர்கள், உல்லாச சஞ்சாரம் செய்வதற்கு, ஆயத்தம் செய்யும் விதம், நடத்தும் விதம், நடத்தியபின் அதன் பிரயோஜனத்தை மாணவர்கள் உய்த்துணரும் விதம் இவைபோன்றவற்றைக் கவனிப்பார்களாக.

முன் வருஷங்களைப்போல் இவ்வருஷத்திலும் நமது மாணவர்கள் மேலே கூறிய இலக்ஷியங்கள் கைகூடுமாறு உல்லாசப் பிரயாணங்கள் சென்றனர். விவரங்களை இம்மலரில் காண்க.

பழய மாணவர் தினம்—சங்கீதப் போட்டி

சென்ற பழய மாணவர் வருடாந்தரக் கொண்டாட்டத்தின் போது, ஸ்ரீ D. மரியஜோசப், 1943-ம் வருஷத்திய பழய மாணவர் வருடாந்தரத் தினத்தன்று நடைபெறும் வாய்ப்பாட்டு போட்டியில், (Open to Old and New boys) முதல்தரமாக விளங்குபவருக்கு ஒரு வெள்ளிப்பதக்கம் அளிப்பதாக வாக்களித்துள்ளார்.

ஆகவே, இவ்வருஷ பழய மாணவர் தினக்கொண்டாட்டத்தன்று (3-3-1943) மாலை 5 மணிக்கு வாய்ப்பாட்டுப் போட்டி நடைபெறும். அப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பழய புது மாணவர்கள், தலைமை ஆசிரியருக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே தங்கள் நாமதேயங்களை சமர்ப்பிக்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் 3 நிமிஷ நேரம் அளிக்கப்படும்.

தலைமையாசிரியர்,
R. C. செக்கண்டரி போதனுமுறை பாடசாலை,
திருச்சிறாப்பள்ளி.

சென்னை கல்வி இலாகா

Proceedings of the Director of Public Instruction, Madras Dis. No. 153/43 dated 9th January 1943.

லோவர் எலிமெண்டரி முழுப்பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள்.
(Headmasters of complete Lower Elementary Schools)

இவர்களுடைய யோக்யதாம்சம், நியமனம் ஆகியவற்றைப்பற்றி கல்விடைரெக்டர் அவர்கள் விடுத்துள்ள புது உத்திரவு பின் வருமாறு :—

இதனுல் கீழ்தர முழு ஆரம்பப் பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களின் யோக்யதாம்சம் (qualifications) நியமன விஷயமாய் 1940-ம் ஹு ஆகஸ்டு ௴ 15-ம் தேதியிலும் (Dis. No. 3861—40) 1942-ம் ஹு ஜுன் ௴ 10-ம் தேதியிலும் (Dis. No. 2203—42) ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருந்த உத்திரவுகள் ரத்தாகிவிட்டன. இனிமேலாக பின்வரும் உத்திரவுகள் அமுலுக்கு வரும்.

1. 1939-ம் ஹு அக்டோபர் ௴ 1-ம் தேதியில் ஒரு முழு ஆரம்பப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக ஆக்டிங் வேலை பார்த்து வந்த பயின்ற ஹையர் கிரேடு ஆசிரியர்களும் ;

அப்படி ஹையர் கிரேடுக்குக் குறைந்த யோக்யதையுள்ளவர்களும் ; 1933 ஸெப்டம்பர் 16-ம் வக்கு முன் இரண்டு வருஷங்களுக்குக் குறையாமல் தலைமை ஆசிரியர்களாய் அனுபவம் பெற்று, 1939-ம் ஹு அக்டோபர் ௴ 1-ம் தேதியில் ஒரு முழு ஆரம்பப் பாடசாலையின் தலைமை ஆசிரியராக ஆக்டிங் வேலை பார்த்தவர்களும் ; அத்தகைய ஆரம்பப் பாடசாலைகளில் 4 அல்லது அதற்கு மேற்கொண்ட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டாலும்கூட இவர்கள் இனிமேலாகத் தொடர்ந்து தலைமை ஆசிரியர் பதவியை வகிக்கலாம்.

2. இவர்கள் ஒரே மானேஜ்மெண்டில் 4 அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்களைக்கொண்ட ஒரு முழுப் பாடசாலையிலிருந்து அத்தகைய வேருெரு பாடசாலைக்கு 1939 அக்டோபர் 1-ம் வக்குப்பிறகு மாற்றப்பட்டாலும்கூட தலைமை ஆசிரியர்களாகவே வேலை பார்க்கலாம். ஆனுல் இவ்வாறு மாற்றும்போது தொடர்பு அற்றுப் போகாமல் நியமனம் ஆகியிருக்க வேண்டும்.

3. இப்படிப்பட்ட தலைமை ஆசிரியர் ஒருவர், ஒரு பாடசாலையில் வேலையினின்று நீக்கப்பட்டால், வேருெரு மானேஜ்மெண்டுக்கு உள்பட்ட 4 அல்லது மேற்பட்ட ஆசிரியர்கள் உள்ள முழு ஆரம்பப் பாடசாலையின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்படக்கூடாது. ஆனுல் அவ்வாறு நீக்கப்படாமல் தொடர்ந்து வேலை பார்த்துவரும் பக்ஷத்தில், மானேஜ்மெண்டுகள் மாறினுலும் அந்த ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர் பதவி பாதிக்கப்படமாட்டாது. அவர்கள் தொடர்ந்து வேலை பார்த்து வரலாம்.

4. இத்தகைய தலைமை ஆசிரியர்கள் ஒரே மானேஜ்மெண்டுக்கு உட்பட்டுள்ள 4 ஆசிரியர்களுக்குக் குறைந்த ஒரு பாடசாலைக்கு மாற்றப்பட்டிருந்தால், அவர்களை மறுபடியும் 4 அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்களையுடைய ஒரு முழுப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக நியமிக்கக்கூடாது. அப்படி நியமிக்க வேண்டுமானால், ஏற்கனவே மாற்றினதற்கு விசேஷ அவசியம் ஏன் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று காட்டியும், மேலதிகாரிகளின் விசேஷ அனுமதி பெற்றும் நியமனம் செய்யலாம்.

5. 1939-ம் ஸ்ரீ அக்டோபர் ஸ்ரீ 1-ம் தேதியில், பூர்த்தியாகாமல் இருந்த (Incomplete Schools,) பாடசாலைகளில் தலைமை ஆசிரியர்களாக வேலைபார்த்த ஸெக்கண்டரி கிரேடு அல்லாத, ஆசிரியர்கள், அப்பாடசாலைகள் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்களடங்கிய முழுப் பாடசாலைகளாக (Complete Schools) உயர்ந்துவிட்டால், தலைமை ஆசிரியர்களாகவே அவர்கள் தொடர்ந்து வேலை பார்க்கக்கூடாது. அப்படி தொடர்ந்து தலைமைப்பதவி வகிக்க மேலதிகாரிகளின் விசேஷ அனுமதி அவசியமாகும்.

G. O. Ms. No. 30 Education dated 5-1-1943.

உயர்தர ஆரம்ப பாடசாலைகளில் பண்டிதர் நியமனம்

VI, VII, VIII, வகுப்புகளில் "பாஷை" பாடம் புதுத்திட்டத்தின்படி போதிப்பதற்கு பாஷையில் பாண்டித்தியம் பெற்றவர்களே தகுந்தவர்களாவர் என்றும், சாதாரணமாய் ஸெக்கண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு அவ்வளவு தேர்ச்சி இருப்பதில்லையென்றும் கல்வி டைரக்டர் அபிப்பிராயப்படுவதால் இவ்வுத்திரவு பிறந்தது. இந்த உத்தரவின்படி திரவிய சகாயம் பெறும் முழு உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில் (Complete higher elementary aided schools) சேவை செய்யவேண்டிய ஸெக்கண்டரி கிரேடு ஆசிரியர்களில் யாராவது ஒருவருக்குப் பதிலாக ஒரு பண்டிதரை நியமிக்கலாம். அவருக்கு ஒரு பயின்ற ஸெக்கண்டரி கிரேடு ஆசிரியருக்கு வழங்கும் கிராண்டு தொகையே அஸெஸ் செய்துகொடுக்கப்படும். இதற்குரிய நிபந்தனைகளாவன :—

(1) சென்னை கல்வி ஒழுங்குகள் (Madras Educational Rules) 13-வது விதியின்படி ஷ பண்டிதரின் யோக்கியதாம்சம் இருக்கவேண்டும்.

(2) ஆஜர் சராசரியை அநுசரித்து ஷ பாடசாலைகளில் எத்தனை ஆசிரியர்கள் இருக்கத்தகுமோ, அந்த எண்ணிக்கைக்கு அதிகமாக ஷ பண்டிதரின் நியமனம் இருக்கப்படாது.

(3) ஷ பண்டிதருக்கு VI, VII, VIII வகுப்புகளில், பாஷை பாட வேலையெல்லாம் கொடுக்கப்படவேண்டும். இந்த வேலை அவருக்குப் போதுமானதாயிருக்கவேண்டும்.

(4) ஷை பண்டிதரின் நியமனம் D. E. O. அல்லது இன்ஸ்பெக்ட்ரெஸ் அனுமதியின்பேரில் ஏற்படவேண்டும்.

(குறிப்பு: லோகல் போர்டுகளுக்கு உட்பட்ட முழு உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு இப்படிப்பட்ட உத்தரவு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது.)

Public Examination at the end of VIII Standard in Higher Elementary Schools, April 1943

TIME-TABLE

Days and hours—1943		Subjects
Friday, 9th April 10 a.m. to 12 noon	...	Language.
2 p.m. to 4 p.m.	...	Elementary Mathematics.
Saturday, 10th April 10 a.m. to 12 noon	...	History and Geography including Civics.

இப்பரீக்ஷையில் மாணவர் அநுசரிக்கவேண்டிய சில விசேஷ விதிகளைப்பற்றி, 1942-ம் ௵ மார்ச்சு மாதப் பூங்கோத்து 251-ம் பக்கம் பார்க்கவும்.

யோசனைக்கணக்கு விடை

(கொத்து 33, மலர் 7, பக்கம் 153.)

விடை: ஒருவனுக்கு 40 பழங்கள். மற்றவனுக்கு 15 பழங்கள்.

ஷை விடையளித்தவர்கள்:—1. N. Mudiappan, Teacher, St. Mary's R. C. El. School, Cantt., Trichy. 2. M. Antonisamy, H. M., R. C. School, Annamangalam. 3. K. Srinivasan, Idappadi. 4. G. Dharmanathan, E. 1. A. 5. M. Visuvasam, H. M. Lab. School, Vengaikurichi. 6. V. P. Natesan, Lab. School, Kottanatham. 7. M. Santiagu, E. 2 A. 8. M. Ponnunathan, E. 1 A. 9. R. Muthukrishna Naidu, Kottmedu.

விடுகவி விடை

(கொத்து 33, மலர் 7, பக்கம் 161)

விடை: 1. தென்னைமரம். 2. காகிதத்தில் எழுதி வாசிப்பது. 3. தேங்காய், நாய்.

ஷை விடையளித்தவர்கள்: 1. S. Arpudasamy, R. C. School, Sempet. 2. Miss S. Dhanapakkiam. 3. E. Thathan, E. 1 B. 4. A. Arulanandam, E. 2 A. 5. M. Antonisamy, Annamangalam.

பூட்டுவில் அலங்காரம்

(M. A. S. Udayar, Tamil Pandit.)

ஒரு செய்யுளின் முதலோடு இறுதி ஒன்றுபட்டுப் பொருள் புணருமாறு கூறுவதே பூட்டுவில் என்னும் அலங்காரமாகும். உதாரணம் :—

"திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்
தண்ணாரமார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு."

இச்செய்யுளுள் தண்ணாரமார்பிற்றமிழர் பெருமானைக் கண்ணாரக் காணக் கதவு திறந்திடுமின் ஏனெனில் மாதர் இறந்துபடின் கதவு திறக்குங் குற்றத்தினும் திறவாமையாலுண்டாகும் மாதர் இறந்து படுங் குற்றம் பெரிதாகும் எனக்கூறு முகத்தால் கதவு திறந்திடுமின் எனச்செய்யுளின் ஈறும் முதலும் பொருந்தச் செய்யுளிசைத்திருப்பதை ஓர்க. இதன் பொருள் :—குளிர்ந்த ஆத்திமாலையணிந்த மார்பினையுடைய தமிழ் நாட்டவர் தம் தலைவனாகிய சோழவரசனை நோக்கிக் களிகூறுமாறு வந்து காணாது உயிர்விடு நிலையுற்ற மாதர்கள் சின்னஞ் சிறிது தாழ்ப்பின் இறந்து படுவர். அவர் அவ்வாறிறந்துபடின் நீவிர் உத்திரவின்றிக் கதவு திறத்தலால் உண்டாகும் குற்றத்தினும், மாதர் இறந்துபடுதலால் உண்டாகும் குற்றம் மிகப் பெரிதாகுமாதலால் அப்பெருமானைக் கண்குளிரக்கண்டு தரிசித்தற்குக் கதவைத் திறந்து விடுவீராக என்பதாகும்.

பொருண் மொழியலங்காரம்

ஆன்மாவிற்குறுதி பயக்கத்தக்க பொருளைச் செய்யுளகத்தே பொருந்துமாறு புலவன் கூறுவது பொருண் மொழியலங்காரமாகும். உதாரணம் :—

"அன்றறிவா மென்னா தறஞ் செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை."

இச்செய்யுளுள் அறஞ் செய்தார் சுவர்க்கம் புகுவாராதலின், அறஞ் செய்து ஆன்மலாபமாய உறுதிப் பொருளைத்தேடிக் கொள்ளுதல் வேண்டும் என்று கூறப்படுதலின் இது பொருண் மொழியலங்காரமாயிற்று. இதன் பொருள் :—

இறுதிக்காலம் வந்துற்ற காலத்து அறஞ் செய்தலை ஒரு தலையாக் கொள்ளுவோம் என எண்ணியிராது இப்பொழுதே உங்களால் இயன்ற அறங்களைச் சிறிதுந்தாழ்க்காது செய்மின்—ஏனென்றால் அவ்வறப் பொருளானது நீங்கள் சாங்காலத்துச் சாகாத் துணையாக நின்று உதவும் என்பது.

சிறுவர்களைச் சுத்தமாகவிருக்கப் பழக்குதல்

(P. G. S. Aiyar, B.A., L.T.)

"சுத்தம் சுகம்தரும் என்று கொட்டையெழுத்துக்களில் அட்டைகளில் எழுதிப் பள்ளியில் தொங்கவிட்டால் மாத்திரம் மாணவர் சுத்தத்தை கைக்கொண்டு விடமாட்டார்கள். சுத்தத்தைப்பற்றிச் சிறந்த வியாசம் எழுதி முதல் பரிசு வாங்கிய மாணவன், அழுக்கடைந்த ஆடையுடன் அலங்கோலமாக மணலில் புரளுவதை நான் என் கண்ணாரக் கண்டிருக்கின்றேன். சுத்தம் என்பது காலக்கிரமத்தில் ஏற்படவேண்டிய பழக்கம். அதில் மாணவர்களைப் பழக்குவதற்கு சுருக்கு வழி கிடையாது. (There is no short cut way of inculcating cleanliness) சுத்தமாயிருப்பது அவசியம் என்ற மனப்பான்மை சிறுவரிடம் ஏற்படவேண்டும். அதைத்தாமாகவே பிறருடைய தூண்டுதலில்லாமல் கைக்கொள்ளும் பழக்கம் நிரந்தரமாக மாணவரிடை வளர்க்கப்பட வேண்டும்.

இத்தகைய பழக்கம் ஏற்படுவதற்கு ஆசிரியர், சிறுவர்கள், அவர்களுடைய பெற்றோர்கள் ஆகிய மூவினத்தவரும் ஒத்துழைத்தலவசியம். இதில் ஆசிரியரின் பொறுப்பு முக்கியமானது. நல்ல பழக்கங்கள் ஏற்படுத்துவதில் ஆசிரியரின் நடத்தையும் உதாரணமும்தான் சிறந்த உதவியென கல்வியாராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இவ்வுண்மையை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆசிரியர் முன்மாதிரிகையாக விளங்குவதற்கு கீழ்க்கண்ட வழிகளில் முயற்சிக்கலாம்.

1. ஆசிரியர் சுத்தமாகவிருக்கவேண்டும். ஆடை விஷயத்தில் சுத்தமாயிருத்தல் மிகவும் அவசியம். ஆடம்பரமாக ஆடை அணிவது தான் சுத்தமான முறையென கொள்ளக்கூடாது.

2. வகுப்பறையையும், விளையாடுமிடங்களையும், பள்ளியின் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக குப்பை கூள மில்லாமல் வைத்திருக்க வேண்டும். இவ்விடங்களைச் சுத்தமாக வைப்பதற்கு மாணவரின் ஒத்துழைப்பைப் பெறலாம்.

3. பாட உபகரணங்களை சுத்தமானவிடத்தில் வைத்துப் பாதுகாக்க வேண்டும்.

4. கரும்பலகையை வாரத்திற்கு இரு முறையாவது சுத்தம் செய்யவேண்டும். கரும்பலகையில் எழுதி விளக்குவதை ஒழுங்குடன் செய்யவேண்டும். பாடம் முடிந்தவுடன் அதைச் சுத்தமாகத் துடைத்து விட்டுத்தான் வகுப்பைவிட்டு வெளியேற வேண்டும்.

5. அசுத்தமாகவரும் மாணவனை வகுப்பைவிட்டுநீக்கி, குளித்து, நல்ல ஆடை உடுத்தி வரச்சொல்ல வேண்டும்.

6. வழக்கமாக சுத்தமாகவரும் மாணவர்களுக்குப் பரிசுகள் கொடுக்கலாம்; அல்லது செம்புள்ளி (Red Entries) கொடுத்து கௌரவிக்கலாம்.

7. சுகாதார விதிகளை ஆசிரியர் பின்பற்றி மாணவர்க்கு வழி காட்ட வேண்டும்.

8. சிறுவர்கள் மலஜலம் கழிப்பதைக் கண்காணித்து மற்ற விடங்களை அசுத்தம் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

9. சிறுவர் தமது புஸ்தகங்களைச் சுத்தமாக வைத்திருக்கின்றனராவென்று மேல்பார்க்கவேண்டும். வகுப்பில் உள்ள குப்பைகூளங்களை பிரத்தியேகமான கூடையில்போட்டு வைக்கும்படி செய்யவேண்டும்.

இவ்வழிகளில் முயற்சிக்கும் ஆசிரியர் பெற்றோரின் ஒத்துழைப்பைப் பெற்றவராயிருக்கவேண்டும். நாம் வகுப்பில் ஏற்படுத்தும் பழக்கங்கள் நிலைபெற வேண்டுமானால் வீட்டில் சிறுவர் அப்பழக்கங்களைக் கைகொள்வதற்கான வசதிகள் காணப்பட வேண்டும்.

மாணவரின் நல்லொழுக்கப் பயிற்சியில் எனது அனுபவம்

(S. A. N.)

ஒரு வகுப்பில் கணக்குப்பாடம் நடக்கிறது. ஆசிரியர் ஒரு கணக்கைக் கொடுத்து மாணவரைத் தம் கற்பலகைகளில் செய்யச் சொல்லுகிறார். ஒவ்வொரு மாணவனும் தன் சொந்த முயற்சியால் பிறருடைய உதவியில்லாமல் செய்யவேண்டிய வேலை இது. கணக்குக் கொடுத்ததும் ஆசிரியர் தம் வேலை முடிந்து விட்டதென்று எண்ணி தமது ஆசனத்தில் உட்கார்ந்து ஏதோ செய்து கொண்டிருக்கிறார். இடையில், "காப்பியடிக்காதே", என்று இரண்டொருமுறை சொல்லுவதைத்தவிற அவர் வேறொன்றும் செய்யவில்லை. ஆனால் நடப்பது என்ன? பலர் தம் பக்கத்திலுள்ளவர் செய்வதைப் பார்த்து அப்படியே எழுதிவிட்டு, முக்கால்வாசி வகுப்புக்குமேல் கணக்கை 'சரியாக'ச் செய்து விடுகிறார்கள். ஆசிரியரும் மாணவரில் பலபேர் சரியாகச் செய்வதைப் பார்த்து திருப்தியடைந்து தப்பிதமாகச் செய்தவர்கள் ஒவ்வொருவருக்கும் "ஏன் கவனித்துச் செய்யக்கூடாது?" என்று ஒரு சிறு அடி கொடுக்கிறார்.

இப்பாடத்தின் பலாபலன் என்ன? போதனாமுறை பயின்ற ஆசிரியர்களும், பயிலாத ஆசிரியர்களுங்கூட இக் கணக்குப்பாடத்தினால் வகுப்பு மாணவர்களுக்கு ஒன்றும் பிரயோசனம் இல்லையென்று ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் நான் கவனிப்பது போதனாமுறையைப் பற்றியல்ல — அதைவிட அத்தியாவசியமான ஒழுக்கப் பயிற்சியே. நல்லொழுக்கப் பயிற்சியே பிரதானம் என்று, புதிய ஆரம்பப் போதனையில் நல்லொழுக்கப்பாடம் கட்டாயப் படிப்பாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. "பொய் சொல்லாதே; திருடாதே; பிறருக்குத் தீங்கிழைக்காதே; எல்லோரிடத்திலும் அன்பாயிரு," என்று சொல்வதில்மட்டும் ஒழுக்கப் பயிற்சி முடிந்து விடவில்லை. அல்லது நல்ல கருத்துள்ள, கற்பனையுள்ள, கதைகளைப்போதிப்பதில்மட்டும் ஒழுக்கப்

பயிற்சி அடங்கிவிடாது. ஒவ்வொரு பாடம் போதிக்கும்போதும், மாணவரோடு பழகும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், ஆசிரியர் மனோ பாவனையில் ஒழுக்கப் பயிற்சி முதலிடத்திலிருந்து ஆட்சி புரிய வேண்டும். மேலே காட்டியுள்ள உதாரணத்தில் ஒழுக்கப் பயிற்சி சம்பந்த மான பலாபலன்களைச் சிறிது கவனிப்போம்.

இப்பாடத்தினால் விளைந்த முதல் தீமை, எதார்த்த மின்மை (dishonesty). "காப்பியடித்தல்" தகாது என்று எல்லா மாணவர்களுக்கும் நன்குய்த் தெரியும். ஆனால் மாணவர் காப்பியடிப்பதானது அவர்களின் ஆசிரியரின் குறையைத்தான் வெளிப்படுத்துகிறது. மாணவர் ஒருவரொருவர் எழுதுகிறதைப் பார்க்கிறதற்கு அவகாசம் நேரிடாதபடி ஆசிரியர் மேல் பார்வை ஜரூராய் இருக்க வேண்டியது. தனி வேலை சம்பந்தப்பட்ட பாடங்களில் மாணவரை எட்டி எட்டி அமர்த்துவது ஆசிரியரின் முதல் வேலையாகும். இரண்டாவதாக, காப்பியடித்தலுக்குக் காரணம் அறியாமையே. கணக்குத் தெரியாத மாணவன் தன் பக்கத்திலுள்ளவன் எப்படிச் செய்கிறான் என்று பார்ப்பான்; பார்த்ததும், அதையே எழுதி உபாத்தியாயரிடத்தில் காட்டிவிட்டால், உபாத்தியாயர் தானே செய்துவிட்டதாக மெச்சுவார் என்று, காப்பியடிக்கத் தொடங்குவான். ஆசிரியர் தம் ஆசனத்தில் உட்கார்ந்திருப்பதை விட்டு மாணவர் நடுவில் உலாவி, கணக்கு செய்யாமல் விழித்துக்கொண்டிருக்கும் மாணவர்களுக்குத் தனித்தனியாக சில உதவிகள் புரிந்தால், அவர்கள் அறியாமை நீங்கியிருப்பதோடு, திருட்டுத்தனமாய்ப் பார்த்து எழுதுவதும் ஒழிந்திருக்கும்.

இப்பாடத்தில் உண்டான இரண்டாவது தீமை, நீதிமுறையில் தப்பறையான எண்ணம். கணக்கு சரியாய் செய்யாதவர்கள் அடி பட்டார்கள்; காப்பியடித்தவர்கள் தப்பித்துக் கொண்டார்கள். பாடம் படிக்கத் தெரியாதவர்களை அடிப்பதானது வெகு மதியீனம். காப்பியடித்துக் கணக்கைச் சரியாய்ச் செய்தவர்களை மெச்சுவதோ அதிலும் பெரிய மதியீனம். ஆசிரியரின் தண்டனையின் அநீதியை மாணவர் தான் சரியாய் உணர்வார்கள்; ஏனெனில் எதார்த்தமாய் செய்து அடி வாங்கினவர்களும், காப்பியடித்து மெச்சுதலைப் பெற்றவர்களும் அவர்களுக்குத் தெரியும். இப்பேர்ப்பட்ட அநீதியான தண்டனையைக் கைப்பற்றுவதால், பிள்ளைகளிடத்தில் நீதியின் மேல் வெறுப்பும், திருட்டுத்தனத்தின்மேல் நாட்டமும் எழும்பும். சரீர தண்டனை (Corporal punishment) யை அரசாங்கத்தார் முழுதும் விலக்கியிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

ஆகவே, ஆசிரியர் போதிக்கும் ஒவ்வொரு பாடசமயத்திலும், தமது மாணவரின் ஒழுக்கப்பயிற்சியைத் தங்கள் கருத்துகளில் ஒன்றாக வைத்திருப்பார்களேயாகில், இவ்வித தப்பறைகளில் விழ மாட்டார்கள் என்பது எனது அபிப்பிராயம்.

பாடக் குறிப்பு

வகுப்பு VII. Std. **நோக்கம் :** உஷ்ணம் பரவும் விதம்.
பாடம் : விஞ்ஞானம். **நேரம் :** 40 நிமிஷங்கள்

உபகரணம் : இரும்புக்கம்பி, செம்புக்கம்பி, கண்ணாடிக்கம்பி, விறகுக்குச்சி, சாராய விளக்கு.

பீடிகை : மாணவர்களின் அநுபவங்களைச் சோதித்தல். அடுப்பில் காய்ந்துகொண்டிருக்கும் பாத்திரத்தை துணியைப் பிடித்துக் கொண்டு இறக்குகிறோம். ஏன் ?

கொல்லன் உலைகளத்தில் காயும் இரும்பைக் கொரட்டைக் கொண்டும், சாக்கைக்கொண்டும் பிடிக்கிறான். ஏன் ?

மேற்கூறிய விஷயங்களைப்பற்றி மாணவர்களிடம் சம்பாஷித்து உஷ்ணம் எவ்வாறு பரவுகிறதென்பதைப்பற்றி பரிசோதனை செய்து பார்ப்போமென்று பாடம் ஆரம்பித்தல்.

பரிசோதனை : மாணவர்களைக்கொண்டே இரும்புக்கம்பி, செம்புக் கம்பி, கண்ணாடிக்கம்பி, விறகுக்குச்சி இவைகளை முறையே தனித்தனியாக ஒரு நுனியைக் கையில் பிடித்து மற்ற நுனியை நெருப்பில் காட்டச் செய்தல்.

கண்டுபிடித்த விஷயம்

1. இரும்புக்கம்பி சீக்கிரம் உஷ்ணமடைந்து கைக்குச் சூடு எட்டுகிறது.

2. செம்புக்கம்பி இரும்புகம்பியைவிட அதிசீக்கிரத்தில் உஷ்ணமடைகிறது. கைப்பொறுக்க முடியவில்லை.

3. கண்ணாடிக் கம்பியை அதிக நேரம் சூடேற்றியும் கை சுடவில்லை. அதாவது நெருப்பிலிருக்கிற பாகம்மட்டும் உஷ்ணமடைகிறது. மறு நுனிக்கு உஷ்ணம் பரவுவதற்கு அதிக நேரமாகிறது.

4. விறகுக்குச்சியில் நெருப்பில் காட்டப்பட்ட பாகத்தைத் தவிர மற்ற பாகங்களின் உஷ்ணம் பரவுவதில்லை.

இதிலிருந்து இரும்பு, செம்பு, இவைகளின் மூலம் உஷ்ணம் எளிதில் பரவுகிறது. அவற்றிற்கு **உஷ்ணவாஹிகள்** என்று பெயர். பொதுவாக உலோகங்கள் யாவும் உஷ்ணவாஹிகள். செம்பு சிறந்த உஷ்ணவாஹி.

கண்ணாடித்தண்டில் உஷ்ணம் அதிகமாகப் பரவுவதில்லை. ஆகையால் எவற்றில் உஷ்ணம் பரவுவதில்லையோ அப்பொருள்களுக்கு அற்பவாஹிகள் என்று பெயர். கண்ணாடி, கல்நார் முதலியவை அற்ப உஷ்ணவாஹிகள். விறகுக்குச்சியில் உஷ்ணம் பரவுவதில்லை. ஆகவே இது உஷ்ணவாஹியல்ல.

அப்பியாசம் : "உஷ்ணம் பரவுகிறது" என்னும் விதியை அனுஷ்டானத்தில் எவ்வாறு கையாளப்படுகிறது ? உஷ்ணவாஹிகள், அற்பவாஹிகள்—ஒவ்வொன்றையும் விளக்குக : வகைக்கு 3 உதாரணங்கள் தரவும்.

நடைமுறை உதாரணங்கள் : வீடுகளில் மர அகப்பைகளைச் சமையலறைகளில் உபயோகிக்கிறோம். பித்தளைச் சட்டுவங்களுக்கு நீண்ட மரப்பிடி போடுவதுமுண்டு. பித்தளைக் கெட்டில்களின் கைப்பிடிகளுக்குப் பிரம்பினால் சுற்றிய பிடி அமைக்கிறோம். சூட்டுக்கோல்களுக்கு மரப்பிடி உண்டு. ஸ்திரிப்பெட்டிகளுக்கு மரப்பிடி போட்டிருக்கிறது. மற்றும் சில உதாரணங்கள் கூறச்செய்து பாடத்தை முடிக்கவும்.

TL
NU3'33:8

நாட்டுப்பாடல்

(G. S. Maria Adaikalam)

"நூல் நூற்றல்"

1. பஞ்சு பின்னி பருத்தி பின்னி, ஏ, தங்கப்பா
பாவனைக்கோ நான் பிறந்தேன், எம் தில்லல்லா
2. கூலிக்கு பஞ்சு பின்னி, ஏ, தங்கப்பா
குருக்குடைஞ்சு வாடுறேண்டா, எம் தில்லல்லா
3. கொல்லக் கருதுகளாம் ஏ தங்கப்பா
கோட்டாத்து ராட்டுகளாம் எம் தில்லல்லா
4. மழு மட்டே வாகனமாம், ஏ, தங்கப்பா
முத்துப்போலே நூலுகளாம் எம் தில்லல்லா—
பஞ்சு பின்னி..............

189984.
சென்னை-600 003

இது என்ன?

(விடுகவிகள்)

1. ஆழக்குழி வெட்டி அதிலொரு முட்டையிட்டு, அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை. (G. Dharmanathan.)

2. இடை இல்லாத பெண் கழுத்து இல்லாத குடம் எடுத்து கரை இல்லாத ஏரிக்குத் தண்ணீருக்குப் போகிறாள்.
(A. Savarimuthu, Thiruppayar.)

3. மூன்றெழுத்தாலாகியவன், முகத்திருகண்ணும் பின்னொரு வாலும் உடையவன். முதல்கடை நன்றிக்குப் பெயர் பெற்ற வாலுடையன் செயல் உணர்த்தும். முதலிடை சேர பாம்புகாலிடை காண்பான் வினை. இடை கடைசேர கடலவன் கோபக்குறி குறிக்கும். இவன் யார்? (M. S. M.)

4. அரைப்பாத்திச் சிறுகீரை அழகுண்டு மணமில்லை.
(E. Thathan.)

சிறு கதை

(P. Antonimuthu)

"இஞ்சி தின்ற குரங்கு"

ஒரு நாள் காட்டிலுள்ள மிருகங்களெல்லாம் ஒன்று கூடின. தங்கள் உடலில் உள்ள ஒவ்வொரு அவயவத்தைப்பற்றியும் பேச ஆரம்பித்தன. பல்லின் உபயோகம் என்ன? மூக்கின் உபயோகம் என்ன என்று விவாதித்தன.

"பல்லா"? விரோதிகளைக் கிழிப்பதற்கும் கொல்லுவதற்கும் ஏற்பட்டது என்று சொல்லிற்று ஒரு சிங்கம். அப்பொழுது ஒரு கிளி தன் பற்கள் எங்கே என்று தேடியது. "நகமா"? எனக்கு இரையாகும் பிராணிகளைக் குத்திக் கிழிப்பதற்கு உபயோகப்படுகின்றது என்று சொல்லியது ஒரு புலி. தனக்கு நகங்கள் எங்கே என்று ஒரு மாடு தேடியது. "மூக்கா"? அக்கம்பக்கத்தில் உள்ளவர்களை வாசனை பார்க்க உபயோகப்படுகிறது என்று யானை சொல்லிற்று. "ஆஹா! என் மூக்கு என்ன அழகாக இருக்கிறது பார் என்று கூத்தாடிற்று ஒரு குரங்கு. "கால்களா" அவைகளைக்கொண்டு எவ்வளவு வேகமாக ஓடலாம் என்றது ஒரு மான். உடனே ஓர் ஆமை தன் கால்களைத் தடவிக்கொண்டது. "கொம்பா"? விரோதிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள உபயோகப்படுகிறது என்று ஒரு மாடு சொல்லிற்று. உடனே முயல் தன் கொம்புகளை கண்ணாடியில் பார்த்துக் கொண்டது.

எல்லா அவயவங்களைப்பற்றியும் அவைகள் ஒவ்வொன்றும் பேச முன் வந்தாலும் வாலின் உபயோகத்தைப்பற்றி பேச ஒரு மிருகமாவது முன் வரவில்லை. வால்களினால் என்ன உபயோகம் என்று தெரியாமல் அவைகள் விழித்தன. கடைசியாய், அக்காட்டின் வன தேவதையிடம் போவதென தீர்மானித்தன......

கூட்டமாக வரும் மிருகங்களைக்கண்ட வனதேவதை அவைகளை வரவேற்று என்ன வேண்டும்? என்று விசாரித்தது. தாயே! எங்களுடைய ஒவ்வொரு அவயவங்களின் உபயோகத்தைக்கண்டு நாங்கள் சந்தோஷப்படுகிறோம் என்று அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஒரு எலி சொல்லிற்று.

"ஆனால் எதைப்பற்றி நீங்கள் சந்தோஷப்படவில்லை" என்று வனதேவதை கேட்க, எல்லா மிருகங்களும் ஏகமனதாக "வால்களைப் பற்றிதான்"! என்று கூக்குரல் இட்டன. உங்களுக்கு வால் இருப்பதனால்தான் நீங்கள் அழகாயிருக்கிறீர்கள். நீங்கள் அதைக் கவனிக்கவில்லையே என்றது வனதேவதை. "வால்கள் எங்களை அழகுபடுத்துவது உண்மையே. ஆனால் அவைகளினால் எங்களுக்கு ஏதாவது உபயோகம் ஏற்படும்படி செய்தால் மிகவும் நல்லது" என்று எலி சொல்லிற்று.

வனதேவதையும் முதலில் எலியைப் பார்த்து "ஏ! எலியே, மனிதர்கள் நீ இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க நேரிட்டால் உன் வம்சத்துக்கே ஆபத்து நேரிடும்; ஆதலால் உன்கால் சுவடுகள் தெரியாதபடி உன்னுடைய வால் அதை அழிக்க உனக்கு உபயோகப்படட்டும் என்றது.

உடனே பசுமாடுகளும் காளைமாடுகளும் தேவதையின் முன் நின்றன. "உங்களுடைய நீண்ட வால் உங்கள்மீது உட்காரும் காகம், ஈ முதலியவைகளைத் துரத்த உபயோகப்படும்" என்று சொன்னது.

இப்படியே சிங்கம் புலி வகையருக்களும் தேவதையின் முன் வந்து நின்றன. "உங்களுக்கு இரைதேட மிகச் சாதகமாயிருக்கும்" என்று சொன்னது.

இப்படியே ஒவ்வொரு மிருகங்களும் தங்கள் தங்கள் வால்களின் உபயோகத்தை அறிந்து சென்றன. கடைசியாய் குரங்குகள் எல்லாம் தேவதையின் முன்னிலையில் கை கட்டி வாய் பொத்தி நின்று எங்கள் வால்களினால் என்ன பிரயோஜனம் என்று கேட்டன. வனதேவதை "உங்கள் வால்களின் உதவியால் மரத்தில் தலைகீழாகத் தொங்கி ஊஞ்சல் ஆடி சந்தோஷமாக இருங்கள் என்று சொன்னது. அக்கூட்டத்திலுள்ள ஒரு வாலில்லாக் குரங்கு தேவதையின் தலைமீது திடீரென்று குதித்து உட்கார்ந்துகொண்டு எனக்கு வாலே கிடையாது: அதற்கு என்ன சொல்லுகிறீர்? என்று கேட்டது. அதனுடைய விஷமத்தைப்பார்த்த தேவதை "உனக்கு எப்பொழுது விஷமம் போகுமோ அப்பொழுதுதான் வால் முளைக்கும் என்று சொல்லி மறைந்தது. குரங்கும் தன் குற்றத்தை உணர்ந்து இஞ்சியை வாயில் போட்டுக்கொண்டது. அதுதான் இஞ்சி தின்றக் குரங்கு.

விகடம்

நீதிபதி: அடேய்! கோர்ட்டில் பொய் சொல்லக்கூடாது. நீ வண்டி ஓட்டித்தானே ஜீவனம் செய்கிறாய்?

குற்றவாளி: இல்லிங்க, சாமி.

நீதிபதி: பின், என்ன செய்கிறாய்?

குற்றவாளி: நான் வண்டி இழுக்கும் மாட்டை ஓட்டி ஜீவனம் செய்கிறவங்க.

(M. Antonisamy, Annamangalam.)

முதலாளி: அடே, நேற்று வாங்கிவந்த நெருப்புப்பெட்டி சுத்த மோசம். இன்றைக்காவது நல்ல தீப்பெட்டி வாங்கி வந்தாயா?

வேலையாள்: எல்லாக்குச்சியையும் உரசிப்பார்த்துதான் வாங்கி வந்தேனுங்க!

(C. Michael.)

பத்திராதிபருக்கு வாழ்த்து

(A. Asirvatham Pillay)

வெண்பா

வானகர் வேந்தனே மாமரி சேயனேத்
தானற் கரத்தேந்துஞ் சற்குருவே—மேனலங்கொள்
சங்கை மிகும்லூர்து சாமியெனுந் தந்தாய்நின்
மங்களஞ்சேர் பாதமலர் வாழ்த்து.

எழுசீர் விருத்தம்

பேசிலா இன்பம் பிறங்குவான்வீட்டைப் பெருநில
மாந்தருக்களிப்பான்
ஏசிலா மறையின் மெய்ப்பொருள் காட்டி யிந்நிலத்தோர்க்
கருள்செய்ய
ஆசிலாவரங்க ளமைந்த மாமரியி னருந்தவத் தோன்றலா
யுதித்த
தேசுலாநாளே விழாவணிசெய்து சிந்தையே களிக்கு
நாளிதுவால்

அறுசீர் விருத்தம்

ஐம்புலக் கதவை ஞான அறிவெனுந் தாளாற் பூட்டி
வெம்பிய மாய்கை மூன்று மேவிடாதகற்றி மற்றும்
அம்பரனலர் செய்பாத மறுதினம் போற்றிசெய்தே
இம்பர்க்கோர் துணையாய் நிற்கு மெந்தையாங் குருவேபோற்றி.

யோசனைக்கணக்கு

(K. Srinivasan)

5 ஆடுகளும் 4 மாடுகளும் சேர்ந்து ரூ. 210 விலையாகிறது. ஆனல் 5 மாடுகளும் 4 ஆடுகளும் சேர்ந்து ரூ. 240 விலையாகிறதென்றல் ஒரு ஆடு, ஒரு மாடு விலை என்ன?

அண்ணே, ஒரு அணு இருந்தால் கொடு இரண்டு இட்டலி சாப்பிட்டுவரேன்.

இல்லையே! என்ன செய்வது.

ச......ரி, என்னிடமுள்ள அணுவுக்குத்தான் சாப்பிட்டுக்கொள்ளனும் போலிருக்கு.

(G. Savarimuthu, Valipalayam.)

எம் பாடசாலை வருடாந்தர உல்லாசப் பிரயாணம்

(K. Antonisamy)

19-1-42, செவ்வாய்க்கிழமை காலை 4 மணிக்கே திருக்குடும்பப் போதனுமுறை பள்ளி மாணவர் பிரயாணக்குழு திரிசிரபுரி ரெயில் வண்டி நிலயத்தில் தஞ்சை நகர் பிரயாணத்துக்குக் காத்து நின்றனர். ஏக குதூகலம். எம் தலைமையாசிரியர் சங். A. லூர்துசாமி, B.A., L.T. அவர்கள் உடன்வந்தனர். மற்றும் சில ஆசிரியர்களும் வந்திருந்தனர் வண்டியும் வந்தது. அனைவரும் ஏறியமர்ந்தோம். மாணவர் தேவ தாயின் கீதங்கள் பாடினர். அநேக இடை நிலையங்களைக் கடந்து தஞ்சையைப் பொழுது புலர்ந்ததும் கண்டோம்.

உருக்கமுள்ள எம் தலைவர்கள் அநேகம் தடவை மாணவர் சிதறிப் போகா வண்ணம் (Roll-call) (ஆஜர்) எடுத்தனர். பின்னர், தஞ்சை யில் வலம் புறப்பட்டு முதலில் இஷ்டம்போல் காலையுணவை உண்டு களித்தனர். அதன்பின் வேகமாக நடந்து பிரஹதீச்வரர் ஆலயத் தைக் காணச்சென்ருேம். அம்மம்ம! எம் நாட்டில் சிறப்பினை யுணர்த்தும் பண்டை கட்டிடங்களைக் கண்டவளவில் மிக்க ஆச்சரிய முற்ருேம். அங்குள்ள பல பொருள்களில் நந்தியும் லிங்கமும் எங்கள் மனதைக் கவர்ந்தது. வானளாவிய கோபுரத்தைக் கண்ட யாம் திகைத்தோம். அகழிகளும் கோட்டைகளும் கண்டு மகிழ்ந்தபின் பழைய ராஜராஜ சோழர் அரசரும் அவர்க்குப்பின் ஆண்டவர்களுடைய அரண்மனைகளையும் கண்டோம். அப்பழைய கட்டிடங்கள் பண்டை கால நாகரீக வளர்ச்சியைத் தெளிவாய் உணர்த்தியன. மாட மாளிகை களும் கூட கோபுரங்களும் பொலிவுற்று விளங்கியன. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகியிருந்தாலும், அக்கட்டிடங்கள் இன்னும் அழகுடன் தோன்றுகின்றன. அவைகளின் ஊடேயிருந்து அநேகாநேக கோவில்கள் பண்டைகால மக்கள் தெய்வபக்தியை உணர்த்தியது. நூற்றுக்கணக்காயமைந்த படிகளையேறி ஓர் கோபுர உச்சியினின்று அந்நகரை முழுதும் பார்த்தோம். அக்கோபுரத்தின் எல்லாப் பக்கங் களிலும் வாயில்கள் இருந்தமையால் அஷ்ட திக்குகளையும் பார்க்க முடிந்தது.

சரபோஜி மகா ராஜன் உருவச்சிலை கீழ் மண்டபத்தில் நாட்டப் பெற்றிருந்தது. தர்பார் ஹாலில் பொன்னாலும் மணிகளாலும் பொறிக்கப்பட்டிருந்த சிம்மாசனமொன்று, இடப்பட்டிருந்தது. சேவகர்கள் உடையும், மண்டபத்தில் விரிக்கப்படும் இரத்தின ஜமுக்காளமும் யாவர் உள்ளத்தையும் கவர்ந்தன.

பின்னர், புத்தக நிலையத்தையும் அதிலுள்ள அளவுகடந்த புத்த கங்கள், வாசக இடங்கள் முதலியவைகளையும் கண்டு வியந்தோம். இந்த ஆனந்தங்களைக் கண்டு களித்தபின், மத்தியான உணவு உண்டு, அருகமைந்த "பார்க்கில்" இளைப்பாறினேம்.

அப்பால் கவர்மெண்டு போதனுமுறைக்கழகத்தைக்காணச் சென்றோம். இதற்கு முன்னேயே சிவகெங்கா பூந்தோட்டமும் செங்குளமும் பார்த்தோம். பிறகு அங்கிருந்து புறப்பட்டு கத்தோலிக்கு தேவாலயம் சென்று அங்கு பகவானை வணங்கி, நாடார் தோட்டத்தைப்பார்வையிட்டோம். பார்க்கவேண்டிய அநேக விஷயங்கள் ஆங்கு நிறைந்திருந்தன. கடைசியில் வண்டி நிலையம் வந்தோம். மாணவர் மாலை சிற்றுணவு அருந்தியதும், மாணவர்க்கென இணைக்கப் பட்டிருந்த தனி வண்டியிலேறி அமர்ந்தோம். சூரியனும் மேற்கு திசையில் அமிழ்ந்தான். வண்டி புறப்பட்டது. சங்கீதம் பாடிக் கொண்டே, திருச்சி வந்து சேர்ந்தது.—தலைமை ஆசிரியர்க்கு வணக்கங்கூறி இருப்பிடம் சென்றோம்.

பெற்றோர் சங்கங்கள்

6-12-42. திருச்சி, கெம்ஸ்டவுன், ஆர். ஸி. பூந்தோட்டப் பாடசாலையின் பெற்றோர் சங்கத் திறப்புவிழா, ஜனுப் கான்பகதூர் P. ஷர்புடீன் ஸாஹிப் பஹதூர் M.A., B.L. (Public Prosecutor) அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாய் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீ A. சின்னத்தம்பி, B.A. அவர்கள் "உபாத்தியாயர்கள் பெற்றோரிடம் ஒத்துழைத்தல்" என்பதைப்பற்றி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். ஷை பாடசாலையின் மானேஜர் சுவாமியவர்கள் அனைவர்க்கும் புத்திமதிகள் கூறினர். தலைவர் தமது பிரசங்கத்தில் ஆசிரியர், பெற்றோர் இவர்களுடைய கடமைகளைப்பற்றி விரிவாய் எடுத்துரைக்கவே, அன்னவர்க்கும் ஏனையோர்க்கும் வந்தனோபசாரங்கள் தலைமை ஆசிரியரால் கூறப்பட்டது.

A. Gabriel Thomas, H. M.

14-12-42. முசிரி தாலூகா பச்சைபெருமாள்பட்டி லேபர் பாடசாலையின் பெற்றோர் சங்கக்கூட்டம், ஷை பாடசாலையில் திரு. ந. முத்துஸாமி அவர்களின் தலைமையின்கீழ் கூடியது. தலைவர் ஷை பாடசாலையில் அதிகமாகப் பிள்ளைகளைச் சேர்க்கவேண்டிய அவசியத்தைப்பற்றி வற்புறுத்தினர். ஆசிரியர் P. முத்துவேல், பெண் கல்வியைப்பற்றியும், திரு. M. சாமிதுரை, கைத்தொழிலைப்பற்றியும் பேசினர். மாணவர்கள் தெனாலிராமன் கதையை நடித்து அனைவரையும் மகிழ்வித்தனர். ராஜவாழ்த்துடன் கூட்டம் கலைந்தது.

P. Muthuvel, Secretary.

24-1-43-ல் திண்டுக்கல் தாலூகா "எயிடெட் ஸ்கூல் ஆரம்ப ஆசிரியர் யூனியன்" துவக்கப்பட்டு அதன் முதல் கூட்டம் திண்டுக்கல் அரசாங்க போதனுமுறைப் பாடசாலையில் நடைபெற்றது. அதற்கு

ஸ்ரீ S. L. இக்னேஷியஸ் B.A., B.L. அவர்கள் தலைமை வகித்தனர். யூனியன் அலுவல்களைப்பற்றித் தீர்மானங்கள் நிறைவேறின.

S. C. Swaminathan.
Asst. Secretary.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

வனபோஜனம்: 13-1-43. இன்று நம் மாணவர்கள் லால்குடிக்குப் பக்கத்திலுள்ள மணக்கால் என்னும் அழகியதோர் கிராமத்திற்கு உல்லாசமாய்ச் சென்று, அங்குள்ள நீர்வள நிலவள இயற்கை எழில்களைக் கண்டானந்தித்து அங்கிருக்கும் தென்னை, மா முதலிய கனி விருக்ஷங்கள் செறிந்த தோப்பில் வனபோஜனம் செய்து கொண்டு மாலையில் பள்ளிக்குத் திரும்பினர்.

உல்லாசப் பிரயாணங்கள்: 19-1-43. நம் ஸீனியர் மாணவர்கள் எல்லோரும் ஜூனியர்கள் ஒரு சிலரும் தஞ்சைமா நகர் காண உல்லாசப் பிரயாணம் சென்றனர். தங்கியிருந்த ஜூனியர் மாணவர்கள் அனைவரும் திருச்சிக்குச் சமீபத்திலுள்ள "நூல் இயந்திரசாலை" (Trichy Cotton Mills) காணச்சென்றனர். இப்பாடசாலைத் தலைமை ஆசிரியர் சங். லூர்துஸ்வாமி B.A., L.T. அவர்கள் ஷை உல்லாசப்பிரயாணங்களின் பொருட்டு தக்க முன் ஏற்பாடுகள் வசதிகள் முதலியவற்றைச் செய்வித்ததோடு, தாமும் தஞ்சைக்கு மாணவர்களுடன் சென்று பிரயாணத்தைப் பயனுடையதாய் ஆக்கிவைத்தனர்.

சாரணீயம்: பாடசாலைக் குருளையர்கள் (Cubs-இளஞ்சாரணர்) 13-1-43 காலையில் திருச்சிக்குச் சமீபத்திலுள்ள கிராப்பட்டி என்னும் இடத்திற்கு Camp சென்றனர். குருளையர் தலைவர் திரு. மரியசூசைமாணிக்கம் அவர்கள் ஆங்கு பற்பல குருளையர் விளையாட்டுகள் நடத்தியும் சிற்றுண்டி தயாரித்துப் பரிமாறிக் கொள்ளவும் செய்து பின்னர் திரும்ப அழைத்து வந்தனர்.

சாரணர் வாரம்: 18-1-43 முதல் 23-1-43 வரை திருச்சி சாரணர் வாரம் கொண்டாடப்பட்டது. நம் பாடசாலைச் சாரணர்கள் ஷை கொண்டாட்டத்தில் பெரிதும் பங்கெடுத்துக்கொண்டு ஈடுபட்டனர். டவுன் சபாமண்டபத்தில் (Town Hall) அணி வகுப்பு நடந்தபோதும் நம் பாடசாலையில் 21-1-43-ல் சாரண வாரத்தில் சாரணர் கொண்டாட்டம் நடந்தபோதும் நம் சாரணர் திறமான வேலைகளைக் காட்டினர். 23-1-43-ல் புத்தூர் மைதானத்தில் நடைபெற்ற சாரணர் பந்தய விளையாட்டுகளில் நம் சாரணர் தம் திறமைகளை மெச்சத்தகுந்த விதமாய்க்காட்டவே, அன்னவர்க்கு நற்சாக்ஷி பத்திரங்கள் அளிக்கப்பட்டன.

உங்களுக்குத் தெரியுமா ?

(N. R. திருவேங்கடம். L. F. H. E. School, Megalathur.)

1. சூரியன் ஒரு நட்சத்திரம். சூரியனைப் பரிசோதித்தால் மத்தியில் (Crest) தீக்குழம்பும், அக்குழம்பிலிருந்து வரும் அதிபயங்கரமான அக்கினிச் சுவாலை பீறிடும் கரும்புள்ளி போன்ற புகையும், அதைச்சுற்றிலும் உஷ்ண படலங்களும், பலவித வாயுக்களும் கூடிய ஒரு அக்கினிப் பிண்டமாகக் காணப்படும்.

2. சூரியன் எட்டு லட்சத்து எண்பதினாயிரம் மைல் குறுக்களவும், 28 லட்ச மைல்கள் சுற்றளவும், 38 லட்சம் சதுரமைல்கள் விஸ்தீரணமும், பூமியிலிருந்து 9 கோடியே 20 லட்சம் மைல்கள் தூரத்திலும் இருக்கிறது.

3. வெளிச்சம் ஒரு நிமிஷத்திற்கு 186000 மைல்கள் பாய்கின்றன. வெளிச்சம் பாயும் இந்த அளவைக்கொண்டே நட்சத்திரங்களின் தூரம் கணக்கப்படுகிறது.

4. சூரியன் உஷ்ணம் வெளிப்பாகத்தில் (Exterior) 7000° செண்டிகிரேட் என்றும், உட்பாகத்தில் (Interior) 1,000,000° செண்டிகிரேட் என்றும் பிரபல வானசாஸ்திரிகள் கணித்திருக்கிறார்கள்.

5. பூமியின் வயது சுமார் 2000 கோடி ஆண்டுகள் என 'Pro Houphton' என்ற பூதத்துவ சாஸ்திரி கூறுகிறார்.

6. பூமியின் எப்பாகத்தில் முதன்முதல் உயிர் உற்பத்தியாயிற்று என்றால் வட துருவத்திற்கருகாமையிலுள்ள சமுத்திரத்தில் தான் என 'Buffon' என்ற பிரபல பிரஞ்சு சாஸ்திரி கூறுகிறார்.

7. ஒரு பெண் தேனீ அதன் வாழ்நாள் முழுதும் சுமார் லட்சம் முட்டைகள் இடுகின்றது.

8. சிலந்திப் பூச்சிக்கு 6 முதல் 8 வரை கண்கள் உண்டு.

9. மனிதனின் இரத்தாசயம் சராசரி 10-லிருந்து 12 அவுன்ஸ் வரை எடையுள்ளது. ஆனால் பெண்களின் இரத்தாசயமோ 8-லிருந்து 10 அவுன்ஸ் வரைதான் எடையுள்ளது. அதனால்தான் ஆண்கள் பெண்களைவிட வலிமையுடையவராய் உள்ளனர்.

10. ஒரு மனிதனுடைய தேகத்தில் சுமார் 240 எலும்புகள் உள்ளன.

பொழுதுபோக்கு 2

ஓர் விசித்திர பணப்பை

(உ. அமலதாச உடையார், திருக்குடும்பஸ்தாபனம் திருச்சி.)

பிள்ளைகளே! முன்னொரு முறை நாம் 'மந்திரவாதியின் கைத் தண்டு' என்ற ஏமாற்று வித்தையை எப்படிச் செய்வது என்று அறிந்தோம். இன்று மற்றுமொரு விசித்திர வேடிக்கையைப் பார்ப்போம்.

எங்கே, எல்லோரும் உங்கள் கண்களை நன்ருய் துடைத்துக் கொண்டு பார்த்து, நான் கேட்கும் கேள்விகட்குச் சடன் என்று பதிலிறுக்க வேண்டும்.

எல்லோரும் தயார்தானு? ஆம் இதோ. இங்கே பாருங்கள், இது என்ன? பூ, இதுதானு. இது ஒரு காகிதம் என்கிறீர்களா? ஆமாம் சார் சந்தேகமே இல்லை இது ஒரு காகிதம்தான். ஆனுல் இதன் நிறத்தைக் கவனியுங்கள். என்ன ஆச்சரியம்! இதன் பின்புறமும் முன்புறமும் ஒரே நிறமாய் இல்லையே. ஆம் இது ஓர் வர்த்தி வர்ணத்தாள். இக்காலத்தில் இது அகப்படாது. உங்களுக்காக வெகு சிரமப்பட்டு காப்பாற்றி வைத்திருக்கிறது இது.

இதன் முன்பக்கம் பச்சைநிறம். பச்சை எல்லோருக்கும் பிடிக்கும் அல்லவா? யாராவது காலணு இருந்தால் கொடுங்களே! சரி போதும். ஒன்று போதும். இதோ இந்த காலணு கொடுத்தது யாரப்பா, ஓ, நீயா, செல்வராஜ், சரி, நீ அதிர்ஷ்டசாலியப்பா. உன் அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறது பார்க்கலாம்.

இப்பொழுது நான் என்ன செய்கிறேன், காலணுவை காகிதத்தில் வைத்து மடிக்கிறேன் நன்ருய்க் கவனியுங்கள். கண்கள் மேஜைமேல் இருக்கட்டும். வேறெங்கும் பார்க்காதீர்கள்.

சூ! மந்திரம் ஏ, காலணு, நீ என்ன சொல்லுகிருய். ஓடிப்போ, ஓடிப்போ. இப்பொழுது நான் என்ன செய்கிறேன்? ஏன் நீங்கள் அத் தாள்மீது குத்துகிறீர்கள். ஆமாம் இந்த காலணு ரோஷங்கெட்டது. ஒரு குத்துப் போட்டபின்தான் அது வெள்ளியாக மாறி ஓர் அரைரூபாயாய்க் காட்சி அளிக்கிறது. உங்கட்கு ஆச்சரியமாய் இருக்கிறதா? வேண்டவே, வேண்டாம். நான் முன்னமேயே சொல்லவில்லையா, செல்வராஜ் அதிர்ஷ்டசாலி என்று சந்தேகமானுல் இதோ பாருங்கள்.

உங்கட்கெல்லாம் ஆச்சரியமாய் இருக்கிறதல்லவா? செல்வராஜுக்கு எட்டணு வேண்டுமாம். ஓகோ, நீ பலேஆசாமி. சரிதான் நான் உனக்கு இந்த எட்டணுவைக் கொடுத்தால் பிறகு எல்லோரும் என்னை 'அரி அரி' என்று அரித்துவிடுவார்கள். பிறகு எனக்குத்

தூங்கவும், பாடம் போதிக்கவும் நேரமே இருக்காது. சரி இதை மறுபடியும் காலணாவாக்கித் தந்துவிடுகிறேன்.

சூ! மந்திரம். ஏ, காலணா ஓடி வா! ஆ! இதோ. செல்வராஜ். இந்தா உன் காலணா.

பிள்ளைகளே, இது ஒன்றுமில்லை. 4 அங்குல சதுர காகிதம் ஒன்று. அதன் மத்தியில் 2 அங்குல சதுரத்திற்குக் கட்டம் வரை. அக்கட்டத்தில் பசை வைத்து மற்றுமொரு 4 அங்குல சதுர காகிதத்தை ஒட்டு. பின்பு உனக்குத் தேவையான நாணயத்தை ஓர் காகிதத்தில் வைத்து மடித்துக்கொள். மற்றொரு தாள் இதன் முன்னால் காலியாய் இருக்கும். அதில்தான் வித்தை. சரி, இவ்வளவுதான். பாக்கி உன் சமர்த்து. நான் வருகிறேன். சீக்கிரம் நாம் மறுபடியும் சந்திப்போம். வணக்கம்.

189984

மனித உடலிலுள்ள ரஸாயனப் பொருள்

(R. Muthu Krishna Naidu, H. M., Kotamedu)

மனித உடலானது சராசரி 140 பவுண்டு கனமுள்ளது. அதில் காணப்படும் இரசாயனப் பொருள்களைக் கடையில் வாங்கினோமானால் ஐந்து ஷில்லிங்குக்கு வாங்கலாம். மனித உடலில் சுமார் 10 காலன் ஜலம் இருக்கிறது. 7 சோப்புக்கட்டிக்குப் போதுமான கொழுப்பு இருக்கிறது. 9000 காகிதபென்சிலுக்குப் போதுமான கரிப்பொருள் இருக்கிறது. 2200 தீக்குச்சிகளுக்குப் போதுமான பாஸ்பரஸ் இருக்கிறது. ஒருவேளை மருந்துக்குப் போதுமான மக்னீசியம் இருக்கிறது. ஒருஆணி செய்வதற்குவேண்டிய இரும்பு இருக்கிறது. ஒரு கோழிக் கூட்டுக்குவேண்டிய போதுமான சுண்ணாம்பு இருக்கிறது. ஒரு நாயின் மீதுள்ள உண்ணிகளைத் தொலைப்பதற்குப் போதுமான கந்தகம் இருக்கிறது. நமது நாட்டினர் ஆங்கிலேயரைக் காட்டிலும் உடலளவிலும் கனத்திலும் குறைந்தவர்கள். ஆதலால் நமது தேசத்தாருடைய உடலிலுள்ள இரசாயனப் பொருளின் விலை இன்னும் குறைவென்றே சொல்லவேண்டும்.

இது விஷயத்தை டாக்டர் தயாஸ்லாஸன் என்பவர் காக்ஸ்டன் ஹாலில் வெகு தெளிவாக பிரசங்கம் செய்துள்ளார்.

சில மிருகங்களின் கர்ப்ப காலவளவு: பூனை-50 நாள்; நாய்-60 நாள்; பன்றி-115 நாள்: ஆடும் வெள்ளாடும்-150 நாள்; பசு-285 நாள்; எருமை-310 நாள்; குதிரை-345 நாள்; கழுதை-380 நாள்; யானை-615 நாள்; என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

A. R. P. பாட்டு

By B. Thomas Victor, Music Teacher
R. C. T. S. Trichy.

29. சங்கராபரணம் — ஸரிகமபதநிஸ
திச்ரகதி—ஆதிதாளம் — ஸநிதபமகரிஸ

பல்லவி

ஸ்ா, பா, காம காரி	ரிகம காரி	ஸா ; ; ‖
கே. ளும் A.R.P. யின்	வே. லை க. ளை	நீர் . . ‖

சரணங்கள்

பாப பாப தாப மாக	மாப மாக	ரீ ; ; ‖
கோர குண்டு வீச்சு களால்	நேரும் விபத்	தை . . ‖
மாம மாம பாம காரி	ரிகம காரி	கா ; ; ‖
தீர முடன் தேக்கிடுதல்	எங்க ளின்வே	லை . . ‖
பாப பாப தாப மாக	மாப மாக	ரீ ; ; ‖
வீர முள்ள நேய ரெம்மை	நம்பி டுவீ	ரே . . ‖
மாம மாம பாம காரி	ரிகம காரி	ஸா ; ; ‖
உதார முடன் நல்லு தவி	செய்தி டுவோ	மே . . ‖

(கேளும்)

2. ஊளையிடும் சங்கின் ஒலி கேட்டவுடனே
கோழைபோல் கலங்கிடா விவேகமுடனே
ஆன்மா யமைந்திருக்கும் **வீ** (V)-க் குழிகளில்
வேலை தவிர்த்திட தேமாந்திடுவீரே. (கேளும்)

3. வீதிகளின் ஓரமுள்ள வீடுகளினுள்
தீதில் தற்கார்த்திடவே ஓடி நுழைவீர்
ஊதி ஒலித்திடு மச்சங்கின் ஒலியுன்
காதிற் படும் வரையில் பத்திரமுடன். (கேளும்)

4. வீக்குழியும் வீடுகளும் இல்லாதிடத்தில்
சீக்கிரமாய் காதுகளை மூடியடைத்து
தாக்கும் குண்டுகளும்மை நோக்கிடாவண்ணம்
பக்குவமாய் குப்புறப் படுத்திடுவீரே. (கேளும்)

பிழை திருத்தம் : சென்ற மாத இதழில் புது வருட வாழ்த்துப்பாவின் பல்லவி 2-வது வரிசையில் க ம ப த நி ஸ் ரி ஸ் நி த ப ம க ரி ஸ நி அநுபல்லவி 2-வது வரிசையில் க்ரீஸ், சரணத்தில் க்ரீஸ், ஸ்வரங்களை இரண்டாம் காலத்தில் பாடவும்.

Reg. No. M. 1534.

OUR EMPLOYMENT BUREAU

The **Bodhana Vishaya Poongothu** is being read every month by thousands of Teachers, hundreds of Teachers' Associations in addition to the numerous Pupil-Teachers in the Training Schools, throughout the Tamil-speaking Districts. This is the best medium of its kind for the advertisement of requirements of Schools. Short "Wanted" advertisements will be published on payment of Re. 1/—from Managers who are subscribers and Re. 1-8-0 from non-subscribers. The subscribing Managers shall quote their subscription numbers while placing an order at the concession rate in Our Employment Bureau.

THE EDITOR,
The Bodhana Vishaya Poongothu,
TRICHINOPOLY.

WANTED one Secondary grade trained Mistress in Moses Mixed School, Vijayapuram, on Rs. 25-1-35 with Provident Fund contribution. There are already 6 Mistresses employed in this School. If unmarried, the Mistress may remain in the School Hostel.

Apply to: **Sri S. Moses Naidu, Manager,**
Moses Mixed School,
Vijayapuram, TANJORE Dt.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.